# CYBELE INDUSTRIES LTD

NO.138, SIDCO Industrial Estate,
Ambattur, Chennai- 600 098.
Ph.No.044-32958399, 32957015, Fax 044-43111117
E-mail: corporate@qflexcable.com Website: www.cybele.co.in
CIN: L31300TN1993PLC025063

Ref.: Sect/2024-25 **Date: 17.02.2025**

**The General Manager**
**Corporate Relations Department**
**BSE Limited**
Floor 25, P J Towers,
Dalal Street,
Mumbai - 400 001. Through: BSE Listing Centre

Scrip Code: 531472

Dear Sir / Madam,

**Sub: Advertisement in Newspaper – reg.**

***

In terms of Regulation 47 of SEBI (Listing Obligations and Disclosures Requirements) Regulations, 2015, we enclose a copy of Extract of **Unaudited Financial Results for the Quarter ended 31st December, 2024 advertised in the following Newspapers on 16.02.2025:**

1. **Trinity Express (English Edition)**

2. **Makkal Kural (Tamil Edition)**

The published copies of aforesaid results will also be made available on the website of the Company at **www.cybele.co.in.** You are requested to take the above information on your records and oblige.

Thanking you,

Yours faithfully,
For **Cybele Industries Limited**

Gnana Praghasam Digitally signed by Gnana Praghasam Date: 2025.02.17 11:45:52 +05'30'

**B.Gnana Praghasam**
**Company Secretary & Compliance Officer**
Encl: As above.

## பக்க விளைவுகள் ஏற்படாமல் வலி நிவாரணம்

# சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் ரூ.42 லட்சத்தில் கதிரியக்க அதிர்வெண் நீக்கியல் கருவி

## நீதிபதி சுந்தர், அமைச்சர் சுப்பிரமணியன் துவக்கிவைத்தனர்



சென்னை, பிப்.16–

சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் வலிகளுக்கு சிகிச்சை அளிக்க ரூ.42 லட்சத்தில் நிறுவப்பட்ட கதிரியக்க அதிர்வெண் நீக்கியல் கருவியின் சேவையை சென்னை ஐகோர்ட் நீதிபதி எஸ்.எஸ்.சுந்தர் மற்றும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

பின்பு, அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

புற்றுநோய் மற்றும் மூட்டு வலியால் வரும் கடுமையான வலிகளுக்கு உரிய நிவாரண சிகிச்சைகள் 2013–ம் ஆண்டு முதல் சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் மயக்கவியல் துறையில் செய்யப்பட்டு வருகிறது.

நாள்பட்ட வலி என்பது 3 மாதத்திற்கு தொடர்ச்சியாக நிலையாக ஒரே இடத்தில் இருக்கும் வலி. மேலும் கை, கால்களில் ஏற்படும் வலி, எலும்பு மற்றும் மூட்டுகளில் ஏற்படும் வாதநோய், புற்றுநோயால் ஏற்படும் பலவித வலி நோய்களால் அன்றாட வாழ்க்கை முறையில் சோம்பலை ஏற்படுத்தும். தூக்கமின்மையை உண்டாக்கும். தற்கொலை போன்ற உணர்வுகளுக்கு பெரிய அழுத்தத்தை உண்டாக்கும்.

### பக்க விளைவு இல்லை

எனவே மருந்து, மாத்திரை, ஊசிகள் மூலம் கட்டுப்படுத்த முடியாத வலிகளுக்கு கதிரியக்க அதிர்வெண் நீக்கம் மூலம் உடம்பில் எந்தவித பாகத்திற்கும் பக்க விளைவுகள் ஏற்படாமல் வலி நிவாரணம் அளிக்க முடியும். ப்ளோரோஸ்கோபி என்று சொல்லப்படும் மிக நேரம் எக்ஸ்ரே மூலம் இந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்த செயல்முறைகளின் மூலம் தினப் பராமரிப்பு நோயாளிகள் மற்றும் உள் நோயாளிகள் பெரிய அளவில் பயன்பெறுவார்கள்.

மாதத்திற்கு சுமார் 50 முதல் 60 நோயாளிகள் வரை இந்த சிகிச்சைகள் மூலம் பயனடைய முடியும். இந்த சிகிச்சையானது பொதுவாக, தனியார் மருத்துவமனைகளில் பொதுமக்கள் பெற வேண்டும் என்று சொன்னால், ஒரு நோயாளிக்கு சுமார் ரூ.50,000 முதல் ரூ.1 லட்சம் வரை செலவாகும். ஆனால் இந்தக் கருவிகள் மூலம் ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் மயக்கத்துறையில் நாள்பட்ட வலி நிவாரண மையத்தின் மூலம் இந்த சிகிச்சை இலவசமாக அளிக்கப்படுகிறது.

எனவே இத்தகைய சிறப்புக்குரிய இக்கருவி அரசு பேராட்சியார் மற்றும் அரசு பொறுப்பு சொத்தாட்சியர் நிதியின்கீழ் ரூ.42 லட்சம் செலவில் நீதியரசர்கள் இம்மருத்துவமனைக்கு தந்து பெரிய அளவில் பயன்பெற உதவியிருக்கிறார்கள்.

### பாம்புக்கடி, நாய்க்கடிக்கு மருந்து

நாய்க்கடி, பாம்புக்கடிகளுக்கான மருந்து 3 ஆண்டுகளுக்கு முன்னால் வரை வட்டார மருத்துவமனை, வட்டம் சாரா மருத்துவமனைகள், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் மட்டும் தான் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வந்தது. இந்த அரசுப் பொறுப்பேற்றபிறகு அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் குறிப்பாக 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏ.எஸ்.வி. என்று சொல்லக்கூடிய பாம்புக்கடி மருந்துகளும், ஏ.ஆர்.வி. என்று சொல்லக்கூடிய நாய்க்கடி மருந்துகளும் அனைத்து மருத்துவமனைகளிலும் இருப்பு வைக்கப்பட்டு, நான் தினந்தோரும் ஆய்வு மேற்கொள்கிற அனைத்து மருத்துவமனைகளிலும் தொடர்ச்சியாகவே கண்காணித்து வருகிறேன்.

அந்த வகையில்தான் சென்னை, பெரியார்நகர் அரசு மருத்துவமனை இன்றைக்கு 500 புதிய படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

மிக விரைவில் வட சென்னையில் 800 படுக்கைகள் கொண்ட ஒரு பிரம்மாண்ட மருத்துவ கட்டமைப்பை அந்த மருத்துவமனை பெறவிருக்கிறது. நாய்க்கடி, பாம்புக்கடிக்கான மருந்து ஒட்டுமொத்தமாக இருப்பு என்பது எல்லா இடத்திலும் இருக்கிறது, அந்த வகையில் அங்கேயும் இருக்கிறது.

### தினசரி 19 ஆயிரம் புற நோயாளிகள்

சென்னை, ராஜிவ்காந்தி அரசு பொது மருத்துவமனையைப் பொறுத்தவரை 2021 மே 7க்கு முன்னாள் தினந்தோறும் புறநோயாளிகளின் எண்ணிக்கை 8 ஆயிரம் ஆக இருந்தது. அது இன்றைக்கு 19 ஆயிரம் ஆக உயர்ந்துள்ளது. இதற்கு காரணம் தற்போது அரசு மருத்துவ சேவையை பொது மக்கள் அதிக அளவு பயன்படுத்த விரும்புகின்றனர்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சென்னை உயர்நீதிமன்ற அரசு பேராட்சியார் மற்றும் அரசு பொறுப்பு சொத்தாட்சியர் லிங்கேஸ்ரவன், மருத்துவக்கல்வி இயக்குநர் சங்குமணி, சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் தேரணிராஜன், மயக்கவியல் துறை இயக்குநர் சந்திரசேகரன் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளம்பேச்சாளர்கள் பயிற்சி முகாம்: துணை முதல்வர் உதயநிதி தொடங்கி வைத்தார்

சென்னை, பிப்.16–

சென்னையில், தி.மு.க. இளம்பேச்சாளர்கள் பயிற்சி முகாமை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

தி.மு.க. இளம்பேச்சாளர்களின் 2 நாள் பயிற்சி முகாமை சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:–

தற்போது பேச்சு என்பது மேடையோடு மட்டும் முடிந்து போகவில்லை. நமது பேச்சுக்கலையை மேம்படுத்திக் கொள்ள, நமது சாதனைகளையும், கொள்கைகளையும், வரலாற்றையும் சொல்ல ஏராளமான களங்கள், ஊடகங்கள் இருக்கிறது. 'யூ டியூப்'பில் 'இன்ஸ்டா ரீல்ஸ்' போடாமல், நமது இயக்கத்தின் வரலாறு, தலைவர்களின் சாதனைகளை, அரசின் சாதனைகளை பேசலாம்.

தொலைக்காட்சி விவாதங்களில் கலந்து கொண்டு நமது கருத்துகளை எடுத்து வைக்கலாம். 'பேஸ்புக், டுவிட்டரில்' நமது கருத்துகளை இன்னும் ஆணித்தரமாக எழுதலாம். இந்த விஷயங்களை சரியாக செய்வதற்கு தான் இந்த 2 நாள் பயிற்சி முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெரியார் சுயமரியாதை இயக்கத்தை தொடங்கிய போது முன்னணி தளபதியாக இருந்தவர் அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி. காசநோயால் பாதிக்கப்பட்ட அவர் ஒரு முறை திருவாரூரில் பேசும் போது அவர் மயங்கி விழுந்துவிட்டார்.

அப்போது 13 வயது நிரம்பிய சிறுவன், பட்டுக்கோட்டை அழகிரியிடம் சென்று இவ்வளவு நோய்வாய்ப்பட்டும் பேச வேண்டுமா? என்று கேட்டார். அதற்கு பட்டுக்கோட்டை அழகிரி, தம்பி... எனக்கு உடம்பு சரியில்லை தான். ஆனால், என்னைவிட இந்த சமுதாயம் அதிகமாக நோய்வாய்ப் பட்டு இருக்கிறது. அதை சரிசெய்ய வேண்டியது எனது கடமை என்றாராம். அந்த 13 வயது சிறுவன் வேறு யாரும் அல்ல, முத்தமிழறிஞர் கருணாநிதிதான். பட்டுக்கோட்டை அழகிரியின் பேச்சால் கவரப்பட்டு, கொள்கையால் ஈர்க்கப்பட்ட தலைவர் கருணாநிதி தனது முதல் மகனுக்கு அழகிரி என்று பெயர் சூட்டி இருக்கிறார்.

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

நிகழ்ச்சியில் துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா, முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், தி.மு.க. இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜோயல் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# திமுக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளராக திவ்யா சத்யராஜ் நியமனம்

சென்னை, பிப். 16–

திமுகவில் இணைந்த நடிகர் சத்யராஜின் மகள் திவ்யா சத்யராஜ் தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து திமுக தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறி இருப்பதாவது:–

திமுக சிறுபான்மை நல உரிமைப் பிரிவு தலைவராக திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை டி.பி.எம்.மைதீன் கான், துணைத் தலைவராக வி.ஜோசப்ராஜ், துணைச் செயலாளராக திருச்சி உறையூர் பகுதியைச் சேர்ந்த கே.அன்வர் அலி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திமுக வர்த்தகர் அணி துணைச் செயலாளராக பெரம்பலூரைச் சேர்ந்தகுள்ளம் ராஜேந்திரன், கிருஷ்ணகிரியைச் சேர்ந்த கே.வி. எஸ். சீனிவாசன், செய்தித் தொடர்பு துணைச் செயலாளராக சென்னையைச் சேர்ந்த சூர்யா கிருஷ்ணமூர்த்தி, தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர்களாக திவ்யா சத்யராஜ், மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் பி.எம். ஸ்ரீதர், மதுரை பா.ச.பிரபு, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளராக சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் வே.தமிழ்பிரியா ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

திமுக ஆதிதிராவிடர் நலக்குழு தலைவராக மருதூர் ஏ.இராமலிங்கம், துணைச் செயலாளராக கொ.ரமேஷ் (தருமபுரி), இலக்கிய அணி துணைச் செயலாளர்களாக சௌமியன் வைத்தியநாதன் (மயிலாடுதுறை), ஜி.நாகநாதன் ( பரமகுடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்), வி.டி.கலைச்செல்வன் (விருத்தாசலம்), கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளராக எம்.எஸ்.ஹரிபாபு (சென்னை), மாணவர் அணி துணைச் செயலாளராக ஜெ.இராமகிருஷ்ணன் (சிவகங்கை), தொண்டர் அணி துணைச் செயலாளராக சென்னை நுங்கம்பாக்கம் எஸ்.எம். கே.அண்ணாதுரை ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் என திமுக தலைமைக் கழகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடசென்னை அனல்மின் நிலையம் மூலம் தடையற்ற மின்சாரம் வழங்க நடவடிக்கை



சென்னை, பிப்.16–

வடசென்னை அனல்மின் நிலையம் மூலம், தமிழகத்திற்கு தேவையான தடையற்ற மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடரும் என தமிழ்நாடு மின்வாரியம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு மின்வாரிய நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் தலைமையில், மின் உற்பத்தி மேலாண்மை இயக்குனர் ஆல்பி ஜான் வர்கீஸ், மின் உற்பத்தி இயக்குனர்கள் செந்தில்குமார், கருக்குவேல்ராஜன் மற்றும் தலைமை என்ஜினீயர்கள் உள்ளிட்ட உயர்நிலை குழுவினர், வடசென்னை அனல் மின் நிலையம் 1 மற்றும் 2ல் நேற்று ஆய்வு மேற்கொண்டனர்.

அனல்மின் நிலையங்களின் கொதிகலன்செயல்திறன், நீராவி சுழலி, கட்டுப்பாட்டு அறை, ஜெனரேட்டர், நிலக்கரி வருகை, நிலக்கரி சேமிப்பு கிடங்கு, நிலக்கரி கையாளும் விதம், கன்வேயர் அமைப்புகளின் செயல் திறன், உலர் சாம்பல் வெளியேற்றும் செயல்முறைகள் ஆகியவற்றை இந்த உயர்நிலை குழுவினர் கள ஆய்வு செய்தனர்.

மேலும், அனல் மின்நிலைய பாதுகாப்பு நெறிமுறைகள், சுற்றுச்சூழல் மேம்பாடு மற்றும் அனல் மின் நிலையங்கள் 1, 2 மற்றும் 3 ஆகியவற்றுக்கு இடையே தடையற்ற ஒருங்கிணைப்பை உறுதி செய்தல், மின் உற்பத்தி திறனை மேம்படுத்துதல், தடையற்ற மின்சார வினியோகத்தை உறுதி செய்தல் போன்றவை குறித்து சம்பந்தப்பட்ட என்ஜினீயர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு மின்வாரிய தலைவர் ஜெ.ராதாகிருஷ்ணன் அறிவுரைகளை வழங்கினார்.

தொடர்ந்து நடைபெற்ற அதிகாரி களுடனான கலந்துரையாடலில், மின் உற்பத்தியில் தொடர் செயல் திறன் மேம்பாடு, தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் சுற்றுச்சுழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து முக்கிய கருத்துகள் விவாதிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, வடசென்னை அனல்மின் நிலையங்கள் மூலமாக மாநிலத்திற்கு தேவையான தடையற்ற மின்சாரம் வழங்குவதில் முக்கிய பங்கு வகிப்பதை உறுதி செய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளும் தொடரும் என அதிகாரிகள் உறுதி அளித்தனர்.

உடன் வடசென்னை அனல் மின் நிலையம் நிலை தலைமைப் பொறியாளர்கள் முத்துக்கிருஷ்ணன், சண்முகசேதுபதி, மேற்பார்வை பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் இருந்தனர்.


### பெயர் மாற்றம்

Rahul Narendar Kumar, தந்தை பெயர்: Narendar Kumar, பிறந்த தேதி: 17/12/1997, நெ.91, ஸ்ரீ சத்யா சாய் காம்ப்ளக்ஸ், 1–A, 1வது மாடி, வரதா முத்தையப்பன் தெரு, சௌகார்பேட்டை, சென்னை – 600001, தமிழ்நாடு. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **RAHUL** என்று அழைக்கப்படுகிறேன்.

Rahul Narendar Kumar

### பெயர் மாற்றம்

Narendar Kumar Mithalal, தந்தை பெயர்: MITHALAL, பிறந்த தேதி: 01/06/1969, நெ.91, ஸ்ரீ சத்யா சாய் காம்ப்ளக்ஸ், 1–A, 1வது மாடி, வரத முத்தையப்பன் தெரு, சௌகார்பேட்டை, சென்னை – 600001, தமிழ்நாடு. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **NARENDAR KUMAR** என்று அழைக்கப்படுகிறேன்.

Narendar Kumar Mithalal

### பெயர் மாற்றம்

SUBHA POORANI ELANGOVAN, தந்தை பெயர்: ELANGOVAN KRISHNARATHNAM, பிறந்த தேதி: 06/11/1995, நெ.4A, கோபாலகிருஷ்ணன் தெரு, ஞானமூர்த்தி நகர், அம்பத்தூர், சென்னை –600053. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New Given name: SHUBHA POORANI New Sur name: ELANGOVAN** என்று அழைக்கப்படுகிறேன்.

SUBHA POORANI ELANGOVAN

### பெயர் மாற்றம்

Mohammed Thaufeeq Omer Ameenur Rahman Fazal, தந்தை பெயர்: Ameenur Rahman Fazal, பிறந்த தேதி: 26.03.2005, நெ.52/20, யாசீன் கான் தெரு, பல்லாவரம், சென்னை– 600 043. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **MOHAMMED THAUFEEQ OMER FAZAL** என்று அழைக்கப்படுகிறேன்.

Mohammed Thaufeeq Omer Ameenur Rahman Fazal

### பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர்கள் பின்கோடு – 602 024, திருநின்றவூர், லலிதாஞ்சலி நகர், 4–வது குறுக்கு தெரு, எண்.9–ல் வசிக்கும் காலஞ்சென்ற டில்லிபாபு அவர்களின் மனைவி **திருமதி.வெங்கடலட்சுமி,** மேற்படியார்களின் குமாரர் **திரு. கார்த்திக், குமாரத்தி திருமதி. திவ்யா** ஆகியோர் கொடுத்த தகவலின் பேரில் இந்த அறிவிப்பு தெரியப்படுத்தப்படுகிறது. என் கட்சிக்காரர்களில் 1வது நபரின் கணவரும், 2 மற்றும் 3 நபர்களின் தந்தையும், ஜெயராமன் அவர்களின் குமாரருமான J. டில்லிபாபு அவர்கள் கடந்த **22.11.2004** தேதியிட்ட ஆவண எண்.**6247/2004** ஆக **ஆவடி சார்பதிவாளர் அலுவலகத்தில்** பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் மூலம் திருநின்றவூர் கிராமத்தில் சர்வே எண்.33/6, புதிய சர்வே எண்.33/6A1Bல் மனை எண்.11க்கு விஸ்தீரணம் 2425 1/2 சதுரடி கொண்ட மனை மற்றும் அதிலுள்ள தளம் போட்ட வீடு உள்பட கொண்ட சொத்தினை திரு.கருணாகரய்யா அவர்களின் மனைவி திருமதி.பி.ஜெயா அவர்களின் பொது அதிகார முகவரும், ரங்கசாமி அவர்களின் குமாரருமான திரு. ஆர். ஜெயராமன் அவர்களிடமிருந்து கிரையம் பெற்று ஆண்டு அனுபவித்து வந்து, கடந்த **04.07.2019**ம் தேதி எனது கட்சிக்காரர்களை மட்டும் வாரிசுகளாக விட்டு இறந்து விட்டார். எனது கட்சிக்காரர்கள் மேற்படி அசல் ஆவணத்தினை கடந்த **03.02.2025** அன்று ஜெராக்ஸ் எடுப்பதற்காக திருநின்றவூர், சி.டி.எச். ரோடில் உள்ள ஜெராக்ஸ் கடைக்கு சென்று விட்டு வீடு திரும்பிய போது, மேற்படி ஆவணம் வழியில் தொலைந்து விட்டது. மேற்படி ஆவணத்தினை தேடி பார்த்தும் கிடைக்கவில்லை. மேற்படி ஆவணத்தினை எவரேனும் கண்டெடுத்தால் அல்லது ஆட்சேபணை இருந்தால் **7** நாட்களுக்குள் என் கட்சிக்காரரிடமோ அல்லது என்னிடமோ தெரிவிக்கவும்.

**எஸ். கிருஷ்ணமூர்த்தி,**
**வழக்கறிஞர்,**
**எண்.9, முதல் குறுக்கு தெரு,**
**லஷ்மிபுரம், திருநின்றவூர்.**
**செல்: 94441 64152.**

### படிவம் G

தமிழ்நாட்டின் சென்னையில் ஊழியர்கள் பணியமர்த்தல் தொழிலில் ஈடுபட்டு வரும்
**ஸ்ரீமார்க் ஹியூமன் ரிசோர்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்கான**
விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு
(தேசிய கடன் தீர்க்க வகையற்றோர் மற்றும் நொடிப்பு நிலை வாரிய (பெருநிறுவன நபர்கள் நொடிப்பு நிலை செயல்முறை தீர்மானம்) ஒழுங்கு விதிகள், 2016ன் ஒழுங்கு விதி 36A (1)ன் கீழ் )

| தொடர்புடைய தகவல்கள் | | |
|---|---|---|
| 1 | கார்ப்பரேட் கடனாளர் பெயர் மற்றும் PAN & CIN/ LLP No. | **ஸ்ரீமார்க் ஹியூமன் ரிசோர்ஸ் பிரைவேட் லிமிடெட்** (CIN: U74990TN2010PTC074974) (PAN: AAOCS5453J) |
| 2 | பதிவு அலுவலக முகவரி | எண்.9, முத்து நகர், பூந்தமல்லி, சென்னை, தமிழ்நாடு, இந்தியா 600056 |
| 3 | இணையதள URL | கிடைக்கவில்லை |
| 4 | பெரும்பாலான நிலையான சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தின் விவரங்கள் | இடைநீக்கம் செய்யப்பட்ட இயக்குநர்கள் குழுவிலிருந்து பெறப்பட்ட தகவலின்படி, நிறுவன கடனாளியிடம் நிலையான சொத்துக்கள் எதுவும் இல்லை. |
| 5 | முக்கிய தயாரிப்புகள்/சேவைகளின் நிறுவல் திறன் | பொருந்தாது |
| 6 | கடந்த நிதியாண்டில் விற்பனை செய்யப்பட்ட முக்கிய பொருட்கள்/சேவைகளின் அளவு மற்றும் மதிப்பு | மொத்த வருவாய் நிதி ஆண்டு 2022-23 (தற்காலிகமானது) இல்லை நிதியாண்டு 2021-22 (தணிக்கை செய்யப்பட்டது} ரூ. 15.41 கோடி |
| 7 | பணியாளர்கள் / ஊழியர்களின் எண்ணிக்கை | இல்லை (நிதி ஆண்டு 2022-23) |
| 8 | இரண்டு ஆண்டுகளுக்கான கடைசியாகக் கிடைத்த நிதிநிலை அறிக்கைகள் (அட்டவணைகளுடன்), கடன் வழங்கியவர்களின் பட்டியல்கள், செயல்முறையின் அடுத்தடுத்த நிகழ்வுகளுக்கான பொருத்தமான தேதிகள் உள்ளிட்ட கூடுதல் விவரங்கள் இங்கே கிடைக்கின்றன. | cirp.srimarg@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் நிகில் சச்தேவாவுக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலமோ அல்லது நிகில் சச்தேவா, எச்.என்.541-L, மாடல் டவுன், ப்ரீத் மருத்துவமனை சாலை, பஞ்சாப் 141002 என்ற முகவரியில் இருந்து ஸ்பீட் போஸ்ட்/கூரியர் மூலமாகவோ பெறலாம். |
| 9 | குறியீட்டு பிரிவு 25(2)(h)–ன் கீழ் தீர்மான விண்ணப்பதாரர்களுக்கான தகுதி இங்கே கிடைக்கிறது: | cirp.srimarg@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் நிகில் சச்தேவாவுக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலமோ அல்லது நிகில் சச்தேவா, எச்.என்.541-L, மாடல் டவுன், ப்ரீத் மருத்துவமனை சாலை, பஞ்சாப் 141002 என்ற முகவரியில் இருந்து ஸ்பீட் போஸ்ட்/கூரியர் மூலமாகவோ பெறலாம். |
| 10 | விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான கடைசி தேதி | 03-03-2025 |
| 11 | வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களின் தற்காலிக பட்டியல் வெளியிடப்படும் தேதி | 13-03-2025 |
| 12 | தற்காலிக பட்டியலில் ஆட்சேபனைகளை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 18-03-2025 |
| 13 | வருங்காலத் தீர்மான விண்ணப்பதாரர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும் தேதி | 28-03-2025 |
| 14 | தகவல் குறிப்பாணை, மதிப்பீட்டு மேட்ரிக்ஸ் மற்றும் வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களுக்கு தீர்வு திட்டங்களுக்கான கோரிக்கைக்கான கடைசித் தேதி | 02-04-2025 |
| 15 | தீர்மானத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 02-05-2025 |
| 16 | விருப்ப கருத்துருவை சமர்ப்பிதற்கான மின்னஞ்சல் முகவரி | cirp.srimarg@gmail.com |
| 17 | MSME ஆக நிறுவன கடனாளியின் பதிவு நிலையின் விவரங்கள். | இடைநீக்கம் செய்யப்பட்ட இயக்குநர்கள் குழுவிலிருந்து எந்த தகவலும் பெறப்படவில்லை. |

தேதி : 16.02.2025
இடம் : லூதியானா

நிகில் சச்தேவா
தீர்மான நிபுணர்
ஸ்ரீமார்க் ஹியூமன் ரிசோர்ஸ் பிரைவேட் லிமிடெட்
IBBI Reg No. IBBI/IPA-001/IP-P-02743/2022-2023/14184
கடித பரிமாற்றத்திற்கான முகவரி : எச்.என்.541-L, மாடல் டவுன், ப்ரீத் மருத்துவமனை சாலை, பஞ்சாப் 141002
ஐபிபிஐ உடன் பதிவு செய்துள்ள முகவரி : எச். என். 2822, முதல் தளம், பிரிவு 32 A, சண்டிகர் சாலை, பிசிஎம் பள்ளி அருகில், லூதியானா, பஞ்சாப் 141010
AFA : AA1/14184/02/311225/107328 Valid upto 31.12.2025

## CYBELE INDUSTRIES LIMITED

CIN: L31300TN1993PLC025063
பதிவு அலுவலகம்: எண். 138, சிட்கோ தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை 600 098
E-mail: corporate@qflexcable.com Website: www.cybele.co.in Tel: +91 044 32958399 Fax: +91 044 43111117

**டிசம்பர் 31, 2024ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் அறிக்கை**

(ரூ. லட்சத்தில்)

| வ. எண் | விவரங்கள் | தனியானது | | | | | | ஒருங்கிணைந்தது | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஒன்பது மாதங்கள் | | முடிந்த ஆண்டு | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஒன்பது மாதங்கள் | | முடிந்த ஆண்டு |
| | | 31.12.2024 (தணிக்கை யாகாதது) | 30.09.2024 (தணிக்கை யாகாதது) | 31.12.2023 (தணிக்கை யாகாதது) | 31.12.2024 (தணிக்கை யாகாதது) | 31.12.2023 (தணிக்கை யாகாதது) | 31.03.2024 (தணிக்கை யானது) | 31.12.2024 (தணிக்கை யாகாதது) | 30.09.2024 (தணிக்கை யாகாதது) | 31.12.2023 (தணிக்கை யாகாதது) | 31.12.2024 (தணிக்கை யாகாதது) | 31.12.2023 (தணிக்கை யாகாதது) | 31.03.2024 (தணிக்கை யானது) |
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 579.72 | 345.66 | 857.06 | 1325.98 | 2673.86 | 3638.85 | 629.54 | 401.47 | 857.06 | 1431.61 | 2673.86 | 3638.85 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு அயிட்டங்களுக்கு முன்) | -159.44 | -579.13 | -120.32 | -1150.35 | -166.39 | -27.10 | -196.70 | -688.90 | -120.32 | -1,297.39 | -166.39 | -27.10 |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டங்களுக்கு பின்) | -159.44 | -579.13 | -120.32 | -1150.35 | -166.39 | -27.10 | -196.70 | -688.90 | -120.32 | -1297.39 | -166.39 | -27.10 |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டங்களுக்கு பின்) | -164.68 | -579.30 | -123.41 | -1155.72 | -170.21 | -7.27 | -201.79 | -689.07 | -123.41 | -1302.60 | -170.21 | -7.27 |
| 5 | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) மற்றும் இதர விரிவான வருமானம் உள்ளடக்கியது) | -164.68 | -579.30 | -123.41 | -1155.72 | -170.21 | 4.87 | -201.79 | -689.07 | -123.41 | -1302.60 | -170.21 | -7.27 |
| 6 | சமபங்கு மூலதனம் (ஒரு பங்கின் முகமதிப்பு ரூ.10/–) | 1069.58 | 1069.58 | 1069.58 | 1069.58 | 1069.58 | 1069.58 | 1069.58 | 1069.58 | 1069.58 | 1069.58 | 1069.58 | 1069.58 |
| 7 | இதர ஈக்விடி (ரிசர்வ்கள்) | | | | | | 1685.97 | | | | | | 1685.97 |
| 8 | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/–) (காலத்திற்கான – வருடாந்திரமல்ல) அடிப்படை மற்றும் டைலூட்டட் (ரூபாயில்) | (1.54) | (5.42) | (1.15) | (10.81) | (1.59) | 0.05 | (1.89) | (6.44) | (1.15) | (12.18) | (1.59) | 0.05 |

**குறிப்புகள்:**
1. மேற்கண்ட நிதி முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு 14.02.2025 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழுவின் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.
2. தேவையான இடங்களில் தொடர்புடைய காலகட்டங்களுக்கான புள்ளிவிவரங்கள் மீண்டும் தொகுக்கப்பட்டுள்ளன.
3. ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளில் துணை நிறுவனங்களான 1. Cybele Electra Pvt Ltd. 2. Cybele Electronics Pvt Ltd. 3.Cybele Properties Pvt Ltd., ஆகியவற்றின் முடிவுகள் அடங்கும்.
4. SEBI (பட்டியல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் பிஎஸ்இ லிமிடெட் இணையதளம் www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.cybele.co.in–ல் உள்ளது.

இடம்: சென்னை
தேதி : 14.02.2025

For Cybele Industries Limited
தாமஸ் பி ஜாய்
நிர்வாக இயக்குனர்

# BIZ-COM

# India's strategic push to achieve AI leadership

**-: Trinity Mirror online team :-**

India is making calculated strides to cement its position as a global leader in artificial intelligence (AI), leveraging its robust technology ecosystem, skilled workforce, and strategic international collaborations. Co-chairing the AI Action Summit in Paris and securing the role of host for the next AI summit, India is reinforcing its aspirations to shape the global AI landscape through governance, innovation, and equitable deployment.

Prime Minister Narendra Modi's participation at the AI Action Summit underscored India's proactive approach to AI leadership. By pledging full support for global AI initiatives and advocating for collaborative efforts, Modi has positioned India as a key player in ensuring the ethical and inclusive development of AI, particularly for underserved regions like the Global South.

This aligns with India's earlier efforts, such as its presidency of the G20 in 2023, where it championed a "pro-innovation regulatory approach" to balance AI innovation with safeguards. Moreover, the Global Partnership on Artificial Intelligence (GPAI) meeting in New Delhi in 2023 demonstrated India's commitment to equitable access to AI resources and capacity-building efforts, especially in traditional medicine.

For instance, India's initiative to explore AI applications in traditional medicine, in collaboration with the World Health Organization (WHO) and the All India Institute of Ayurveda (AIIA), showcased its focus on fostering innovation while preserving cultural heritage. By enabling capacity building and equitable access to AI tools for traditional medicine practitioners, India has shown how AI can bridge global divides and accelerate knowledge sharing.

Meanwhile, France used the summit to position itself as a European AI powerhouse. President Emmanuel Macron announced a □109 billion AI investment plan to make France and Europe key players in the global AI race, currently dominated by the US and China. Macron's announcement comes on the heels of the US unveiling its $500 billion Stargate AI infrastructure project earlier this year.

Macron also stressed the need for Europe to simplify regulations to foster innovation, likening France's efforts to the US's ambitious AI initiatives. The European Commission echoed this sentiment by unveiling a unified AI strategy to accelerate growth and create a bigger market for European startups.

The summit revealed sharp contrasts in how regions approach AI governance. The Paris Charter on AI, adopted by nations including India, Germany, and Kenya, emphasized accountability, transparency, and inclusivity as cornerstones for developing AI in the public interest. These principles resonate with India's emphasis on ethical AI development.

In contrast, the United States advocated for minimal regulation, with Vice President JD Vance cautioning against overregulation that could hinder innovation. The US notably abstained from signing a joint statement by 60 nations pledging to reduce digital divides and promote safe and inclusive AI. This divergence highlights the competing philosophies driving AI governance, with Europe and India championing a values-based approach while the US focuses on unbridled innovation.

**India's opportunity in the global AI race**

India's expanding influence in AI governance is no accident. The country's growing tech ecosystem, talent pool, and global partnerships uniquely position it to take on a leadership role. Hosting the next AI summit provides India with a platform to steer the global conversation on responsible AI, particularly for equitable access and addressing digital divides.

Moreover, India's holistic vision for AI — balancing innovation with inclusivity and ethics — aligns well with global priorities. By fostering collaborations at forums like the AI Action Summit and the India-France CEOs Forum, India is also encouraging private-sector partnerships to drive technological and economic progress.

Artificial intelligence represents more than just a technological revolution; it is a transformative force that is reshaping societies, industries, and governance worldwide. Leaders like Macron and Modi recognize that the development of AI requires international dialogue and cooperation to ensure it reflects shared values and serves humanity.

India's efforts to integrate AI into traditional medicine and its broader vision of democratizing AI tools for marginalized communities highlight its commitment to inclusive development. Meanwhile, Europe's focus on creating resilient ecosystems and simplifying regulations complements India's approach, setting the stage for deeper collaboration.

As the global AI race intensifies, India's strategic initiatives and active role in international forums signal its readiness to lead. By hosting the next AI summit and promoting a balanced approach to innovation and governance, India is not only advancing its aspirations but also contributing meaningfully to the global AI landscape. In doing so, it is helping shape a future where AI is not just a tool for technological advancement but a catalyst for inclusive societal progress.

# Are misleading ads by start-ups sign of deeper governance malaise?

The consumer landscape has undergone dramatic shifts over the past few years, largely driven by the rise of online-first companies. These startups, particularly those in the direct-to-consumer (D2C) space, are rewriting the rules of consumer marketing and distribution, leaving traditional consumer brands scrambling to keep pace. With bold innovations in influencer marketing, social commerce, and content-driven campaigns, D2C startups are setting the pace for what modern advertising looks like.

The diversity within the D2C sector is vast, spanning everything from food and beverages, personal care, and baby care to health and wellness, fashion, pet care, electronics, and even travel. According to a recent report by 1Lattice and Sorin Investments, India's D2C market is expected to reach a staggering $61.3 billion by FY-27, with an annual growth rate of around 38 percent. Such promising numbers speak to a huge demand and consumer willingness to spend more for unique products and services.

Many D2C brands have tapped into this consumer enthusiasm by offering niche products that appeal to a discerning audience. However, as these brands race to scale and capture market share, they may be venturing onto shaky ground. And there is a troubling question that arises-are these new approaches skirting ethical lines, and if so, does this point to deeper governance issues?

Initially, it might seem like these missteps are simply an oversight, an inadvertent byproduct of youthful ambition and resource constraints. Many startups operate with limited marketing and legal expertise, which can lead to some unintentional breaches of advertising guidelines. However, as these violations persist and increase, it begs the question- are these missteps truly incidental, or do they reflect a more problematic mindset?

To understand this, we must deep dive into the startup culture itself, particularly in the D2C world. For many of these companies, the primary focus is on rapid growth, often at the expense of cautious brand-building. In their quest to attract customers and stand out in a crowded digital marketplace, many D2C startups are tempted to use eye-catching claims and flashy marketing tactics.

The pressure to perform is intense, with investors demanding quick returns. In this high-stakes environment, ethical advertising may seem less critical than driving conversions. However, as we've seen with several high-profile cases, cutting corners in advertising can backfire spectacularly. Misleading claims, once uncovered, damage a brand's credibility and erode consumer trust—both of which are invaluable for long-term success.

Startups in the D2C space must recognise that ethical advertising isn't just about ticking regulatory boxes; it's a cornerstone of sustainable brand building. As more D2C players enter the market, building trust with consumers will be paramount. And only those with robust governance structures, including honest communication, will thrive in the long term.

**Manisha Kapoor,**
**CEO & Secretary General, ASCI**

# 'Amid growing volatility, new entrants should stay invested in equities'

With the right risk appetite and investment horizon, recent entrants may consider staying invested in equities to benefit from its potential to build long-term wealth generation, says ShreyashDevalkar, Head – Equity, Axis Mutual Fund.

In his exclusive interview with *Trinity Mirror*, ShreyashDevalkar, Head – Equity, Axis Mutual Fund shared his views about growing volatility.

*What are the reasons for heightened volatility?*

Elevated valuations, indices hitting lifetime highs, disappointing earnings growth, and persistent geopolitical tensions cast a shadow on the markets, causing heightened volatility, especially in the last three months of 2024. The heightened volatility at the start of 2025, especially the sharp fall witnessed on Monday, was likely fuelled by the concerns on the HMPV virus, though the severity and economic impact is not clear as yet, as well as subdued quarterly updates ahead of the Q3 earnings season.

*Why are the tariffs Donald Trump is expected to impose a concern for Indian equity markets? Why is the dollar strengthening? And how does that impact Indian equities?*

The return of President-elect introduces a new dimension to the US economy and the Fed policy. US President-elect's proposed "America First" policies, such as lowering corporate taxes, imposing higher tariffs on China and rest of the world, and incentivizing local manufacturing, are expansionary and positive for US economic growth. However, these measures could lead to higher inflation and in effect higher interest rates, higher bond yields, and a stronger US dollar. Many emerging market currencies, including the rupee, are already under pressure.

*What is causing the earnings growth slowdown? Is a turnaround anywhere on the horizon?*

The July-September results season was muted and disappointing in many aspects as both topline and bottom-line earnings growth was visibly under pressure. A slowdown in the capex ahead of elections resulted in disappointing numbers in the quarter that led to a slowdown across all three major economic pillars - consumption, capex and exports – leading to a broad-based impact on the overall earnings.

*Amid growing volatility, why should recent entrants stay invested in equities?*

Over the long term, equities as an asset class have generated returns closer to nominal GDP growth and hence has the potential to generate inflation-beating returns allowing investors to benefit from compounding. While short term volatility is to be expected, it offers investors an opportunity to invest at relatively better valuations. investors should focus on time in the market, rather than timing the market. Despite this recent volatility, the Indian economy continues to be one of the fastest-growing economies in the world, with robust domestic demand, a diversified economy and a sound financial system. Hence with the right risk appetite and investment horizon, recent entrants may consider staying invested in equities to benefit from its potential to build long-term wealth generation.



# Sachin Bansal steps down as Navi CEO

Entrepreneur Sachin Bansal is set to assume the role of executive chairman at Navi Group, marking a big shift in the leadership structure of the financial services and technology conglomerate. Navi Group, which includes the lending arm Navi Finserv and technology division Navi Technologies, was co-founded by Bansal in 2016.

Having served as CEO since its inception, Bansal will now focus on driving strategic initiatives, including exploring new growth opportunities, pursuing mergers and acquisitions, and enhancing the company's compliance and risk management frameworks.

The transition comes after a recent board meeting on Friday, where the Navi board approved the appointments of Abhishek Dwivedi as CEO of Navi Finserv and Rajiv Naresh as CEO of Navi Technologies. Both executives have been with the company since its founding, reflecting a continuity in leadership as the group navigates its next phase of growth.

Bansal's new role follows a challenging period for Navi Group, which faced regulatory action from the Reserve Bank of India (RBI) in October. The central bank imposed a ban on the company's operations, citing concerns over its pricing policies and significant mark-ups over funding costs, which were found to be inconsistent with regulatory standards. After multiple rounds of discussions and corrective measures, the RBI lifted the ban in December, enabling Navi to resume operations.

# Meta to acquire Korean AI chip startup

Seoul: Meta Platforms, the parent company of Facebook, is reportedly in discussions to acquire South Korean artificial intelligence semiconductor design startup FuriosaAI, according to Forbes and industry sources.

Forbes reported that the acquisition talks could be finalized as early as this month.

FuriosaAI is a fabless semiconductor company specializing in AI inference chips for data center servers. The startup was founded in 2017 by Paik June, a former engineer at Samsung Electronics and US chip giant AMD.

The company introduced its first AI chip, Warboy, in 2021, followed by the launch of its next-generation AI chip, RNGD, in August last year.

When unveiling RNGD in Silicon Valley in August, FuriosaAI boasted that it offers three times the performance per watt compared to Nvidia's advanced AI chip, the H100.Mark Zuckerberg, CEO of Meta, has announced plans to invest up to $65 billion in AI infrastructure this year. The company aims to construct new large-scale data centers and allocate between $60 billion and $65 billion to AI-related technologies.

A Meta Korea official, however, declined to comment on the acquisition rumor.

FuriosaAI has raised around $115 million in funding so far. Earlier this month, it secured a 2 billion won ($1.4 million) investment from domestic venture capital firm Crit Ventures.

Korean IT giant Naver and local investment firm DSC Investment participated in the company's early funding rounds. Paik reportedly holds an 18.4 percent stake in the company.

## PRITHVI EXCHANGE (INDIA) LIMITED

CIN: L30006TN1995PLC031931
Regd. Office: Gee Gee Universal, 2nd Floor, Door No.2,
Mc Nichols Road, Chetpet, Chennai – 600031, Tamil Nadu
Website: www.prithvifx.com , Email: secy@prithvifx.com, Phone: 044 -43434261

**STATEMENT OF UNAUDITED FINANCIAL RESULTS (STANDALONE & CONSOLIDATED) FOR THE QUARTER & NINE MONTHS ENDED DECEMBER 31, 2024**

The Board of Directors of the Company, at the meeting held on February 14, 2025 approved unaudited financial results of the Company for the quarter and nine months ended December 31, 2024 ('Financial Results')

Financial Results along with the Limited Review report have been uploaded on the Company's website https://prithvifx.com/wp-content/uploads/2025/02/Unaudited-Financial-Results-for-Q3-2024-25.pdf and can be accessed by scanning the QR code

For Prithvi Exchange (India) Limited
Sd/-

Pavan Kumar Kavad
Managing Director
DIN: 07095542

Place: Chennai
Date: 15-02-2025

## CYBELE INDUSTRIES LTD

CIN: L31300TN1993PLC025063
138, SIDCO INDUSTRIAL ESTATE, AMBATTUR, CHENNAI -600 098.

**Extract of the Unaudited Financial Results for the Quarter and Nine Months ended 31st December 2024**

(Rs. In lakhs except EPS)

| S. No. | Particulars | Standalone | | | | | | Consolidated | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Quarter Ended | | | Nine Months Ended | | Year ended | Quarter Ended | | | Nine Months Ended | | Year ended |
| | | 31 - Dec 2024 (Unaudited) | 30 - Sep 2024 (Unaudited) | 31 - Dec 2023 (Unaudited) | 31 - Dec 2024 (Unaudited) | 31 - Dec 2023 (Unaudited) | 31 - March 2024 (Audited) | 31 - Dec 2024 (Unaudited) | 30 - Sep 2024 (Unaudited) | 31 - Dec 2023 (Unaudited) | 31 - Dec 2024 (Unaudited) | 31 - Dec 2023 (Unaudited) | 31 - March 2024 (Audited) |
| 1 | Total income from operations | 579.72 | 345.66 | 857.06 | 1325.98 | 2673.86 | 3638.85 | 629.54 | 401.47 | 857.06 | 1431.61 | 2673.86 | 3638.85 |
| 2 | Net Profit/(Loss) for the period (before tax and Exceptional items) | -159.44 | -579.13 | -120.32 | -1150.35 | -166.39 | -27.10 | -196.70 | -688.90 | -120.32 | -1,297.39 | -166.39 | -27.10 |
| 3 | Net Profit/(Loss) for the period before tax (after Exceptional items) | -159.44 | -579.13 | -120.32 | -1150.35 | -166.39 | -27.10 | -196.70 | -688.90 | -120.32 | -1297.39 | -166.39 | -27.10 |
| 4 | Net Profit/(Loss) for the period after tax (after Exceptional items) | -164.68 | -579.30 | -123.41 | -1155.72 | -170.21 | -7.27 | -201.79 | -689.07 | -123.41 | -1302.60 | -170.21 | -7.27 |
| 5 | Total Comprehensive Income for the period (Comprising Profit for the period after tax and other comprehensive income after tax) | -164.68 | -579.30 | -123.41 | -1155.72 | -170.21 | 4.87 | -201.79 | -689.07 | -123.41 | -1302.60 | -170.21 | -7.27 |
| 6 | Paid -up Equity share capital (Face Value of Rs.10/- each) | 1069.58 | 1069.58 | 1069.58 | 1069.58 | 1069.58 | 1069.58 | 1069.58 | 1069.58 | 1069.58 | 1069.58 | 1069.58 | 1069.58 |
| 7 | Other Equity ( Reserves ) | | | | | | 1685.97 | | | | | | 1685.97 |
| 8 | Earnings per share (of Rs.10/- each) (for the period - not anualised) Basic & Diluted Rs. | (1.54) | (5.42) | (1.15) | (10.81) | (1.59) | 0.05 | (1.89) | (6.44) | (1.15) | (12.18) | (1.59) | 0.05 |

**Notes:**

1. The above financial results were reviewed by the Audit Committee and approved by the board of directors in their meeting held on 14.02.2025
2. The figures for the corresponding periods have been regrouped wherever necessary.
3. Consolidated Financial Staements inculdes the results of subsidiaries 1. Cybele Electra Pvt Ltd. 2. Cybele Electronics Pvt Ltd. 3.Cybele Properties Pvt Ltd.,.
4. The above is an extract of the detailed format of the fiancial results filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing and Obligations Disclosure Requirements) Regulations, 2015. The Full format of the financial results are available in the website of the BSE Limited. i.e. www.bseindia.com and in the websie of the Company i.e. www.cybele.co.in

for Cybele Industries Limited
Thomas P Joy
Managing Director

Place : Chennai
Date :14.02.2025